TAMIL NADU
GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No.29] CHENNAI WEDNESDAY, JULY 23,2008
Aadi 8, Thiruvalluvar Aandu-2039

# Part VI --- Section 2
(Supplement)

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

2008 ஆம் ஆண்டு மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை ஒழுங்குமுறை விதிகள்

அறிவிக்கை எண். த.மி.ஒ.ஆ./ஒழுங்குமுறை விதிகள்/ISO/A/11/1-1, 07.07.2008 நாளிட்டது:

---

2003ஆம் ஆண்டு மின்சாரச்சட்டத்தின் (மத்தியச்சட்டம் 36/2003) படி, 2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் – மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை ஒழுங்குவிதிகள், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் குறித்துரைக்கப்பட்டு மற்றும் அதனை 2005 ஆகஸ்டு 3 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் (பகுதி VI – பிரிவு 2 பின்னிணைப்பு) வெளியிடப்பட்டுள்ளது என்பதாலும்,

மற்றும் அது, 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் – மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை ஒழுங்குமுறைவிதிகளில் பட்டியலிடல் மற்றும் செலுத்துகை நடைமுறைகளைச் சேர்த்து திருத்தம் செய்வது அவசியமெனக் கருதுவதாலும்,

இப்போது, அதற்காக, 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181 ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம் பின்வரும் திருத்தங்களை, (இதன்பின்பு இதில் முதன்மை ஒழுங்குமுறை விதிகள் என்று குறிப்பிடப்படும்). 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் – மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை ஒழுங்குவிதிகளில் செய்கிறது, அவையாவன:-

2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் – மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை ஒழுங்குமுறை விதிகள் (முதலாம் திருத்தம்) ஒழுங்குமுறை விதிகள்.

1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்:

(i) இந்த ஒழுங்குமுறை விதிகள், 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் – மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை ஒழுங்குமுறை விதிகள் (முதலாம் திருத்தம்) ஒழுங்குமுறை விதிகள் என்று வழங்கப்பெறும்.

(ii) இந்த ஒழுங்குமுறை விதிகள், முதன்மை ஒழுங்குமுறை விதிகள் நடைமுறைக்கு வந்துள்ள தேதியான 2005 ஆகஸ்டு 3 அன்று நடைமுறைக்கு வரும்.

2. முதன்மை ஒழுங்குமுறை விதிகளின் 18 ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம்:

முதன்மை ஒழுங்குமுறை விதிகளின்18 ஆம் ஒழுங்குமுறை விதியில் (d) கூறுக்குப்பின்பு பின்வரும் கூறு சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது :-

“ (e) திறந்த நுழைவுரிமை நுகர்வோர், திறந்த நுழைவுரிமையைப் பயன்படுத்தத் தொடங்கிய தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் மேலேயுள்ள பிணையத்தைச் செலுத்துதல் வேண்டும்.

3. முதன்மை ஒழுங்குமுறை விதிகளில் புதிய ஒழுங்குமுறை விதி 19–A புகுத்துதல் :

முதன்மை ஒழுங்குமுறை விதிகளில் 18 ஆம் ஒழுங்குமுறை விதிக்குப் பின்பு பின்வரும் ஒழுங்குமுறை விதி புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :-

19– A பட்டியலிடல் மற்றும் செலுத்துகை

(1) உரிமம்மதாரர் / து.மி.ப.மை (S.L.D.C.) பட்டியலைத் தயாரித்தல் வேண்டும் மற்றும் திறந்த நுழைவுரிமை நுகர்வோர் கீழ்கண்ட கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.

(a) மின்செலுத்துதல் கட்டணங்கள்

(i) மா.மி.செ.ப. (S.T.U.) / மின்செலுத்தல் உரிமம்தாரர் அடுத்து வரும் ஆங்கில மாதத்தின் 5 ஆம் நாளுக்கு முன்பு திறந்த நுழைவுரிமை நுகர்வோருக்கு மின் செலுத்தல் கட்டணங்களுக்கு பட்டியலைத் தயாரித்தல் வேண்டும்.

(ii) திறந்த நுழைவுரிமை நுகர்வோர், பட்டியல் தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.

(b) மின்சாரம் கொண்டு செல்லுதல் கட்டணங்கள்

மின் பகிர்வு உரிமம்தாரர், மின்பயனீட்டுக் கணக்கீடுத் தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.

(c) இயக்கத்திட்டமிடல் மற்றும் அமைப்புமுறைக் கட்டணங்கள்

(i) து.மி.ப.மை. (S.L.D.C.) அடுத்து வரும் ஆங்கில மாதத்தின் 5 ஆம் நாளுக்கு முன்பு பட்டியல்களைத் தயாரித்தல் வேண்டும்.

(ii) திறந்த நுழைவுரிமை நுகர்வோர், பட்டியல் தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.

(d) உபரிக்கட்டணம் மற்றும் கூடுதல் உபரிக்கட்டணம்

(i) மின்பகிர்வு உரிமம்தாரர், மின்பயனீட்டுக் கணக்கீட்டுத் தேதியிலிருந்து ஐந்து நாட்களுக்குள் திறந்து நுழைவுரிமை நுகர்வோர்க்குப் பட்டியல் தயாரித்தல் வேண்டும்.

(ii) திறந்த நுழைவுரிமை நுகர்வோர், பட்டியல் தேதியிலிருந்து, ஏழு நாட்களுக்குள் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.

(e) மின்கட்டமைப்பு ஆதாரக்கட்டணங்கள்

(i) மின்பகிர்வு உரிமம்தாரர், மின்பயனீட்டுக் கணக்கீட்டுத் தேதியிலிருந்து ஐந்து நாட்களுக்குள் 9 ஆம் ஒழுங்குமுறை விதியின் (7) ஆம் உள் – ஒழுங்குமுறை விதியின் (a) கூறில் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளின்படி மின்வழங்கலுக்கு ஆதரவளிக்கும் நுகர்வோர் மூலம் மின் கட்டமைப்பிலிருந்து பெறும் மின்சக்திக்காக திறந்த நுழைவுரிமை நுகர்வோருக்குப் பட்டியல் தயாரித்தல் வேண்டும்.

(iii) திறந்த நுழைவுரிமை நுகர்வோர், பட்டியல் தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.

(2) கட்டணங்களைச் செலுத்தத் தவறுவதன் விளைவாக 9 ஆம் ஒழுங்குமுறை விதியின் (8) ஆம் உள் – ஒழுங்குமுறை விதியில் அடங்கியுள்ளவாறான திறந்த நுழைவுரிமை தொடர்பு அற்றுப் போகும்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

இரா. பாலசுப்பிரமணியன்
செயலாளர்